# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)
## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, KARAIKUDI.
## C.C. No.611/2022 P.W.1

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | மகாலெட்சுமி | க-பெ | பழனியப்பன் |
| ஊர்: | : | காரைக்குடி | | |
| வயது: | : | 39/2026 | வட்டம்: | |
| தொழில்: | : | டெய்லர் | மாவட்டம் | சிவகங்கை |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 10.02.2026

**எதிரி ஆஜர்.**

------------------------------------------------------------------------------------------------

<u>குறுக்கு விசாரணை.</u>

காவல் நிலையத்தில் யார் புகார் கொடுத்தது என்றால் நான் தான் கொடுத்தேன். புகார் யார் எழுதியது என்றால் நான் தான் எழுதினேன். புகால் அடித்தல் திருத்தல் மற்றும் அம்புக்குறி போட்டு சில வார்த்தைகள் சேர்க்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடம் நகரின் முக்கிய பகுதி என்றால் சரிதான். சம்பவம் நடந்த இடத்தின் பக்கத்தில் போலீஸ் Check Post உள்ளது என்றால் சரிதான். புகாரில் எனது சங்கிலியை அறுத்து சென்று விட்டார் என்று மட்டுமே சொல்லியுள்ளேன் எதிரியின் அடையாளங்கள் எதுவும் சொல்லவில்லை என்றால் சரிதான். சம்பவம் நடக்கும் போது யார் சங்கிலியை அறுத்து சென்றார்கள் என்று நான் பார்க்கவில்லை என்றால் சரிதான். புகாரில் சங்கிலியை அறுத்து சென்ற நபர் எந்த வாகனத்தில் வந்தார் வண்டி நம்பர் எதுவும் சொல்லவில்லை என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லும் இடத்திற்கும் காவல் நிலையத்திற்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் 1 கி.மீ இருக்கும். சம்பவம் நடந்ததாக சொல்லும் இடத்திற்கும் காவல் நிலையத்திற்கும் 10 நிமிடத்தில் வந்து விடலாம் என்றால் சரிதான்.

காவல் நிலையத்தில் கொடுத்த புகார் 4 மணி நேரம் கழித்து தான் புகார் கொடுத்தேன் என்றால் சரிதான். ஏன் தாமதமாக கொடுத்தேன் என்று நான் எனது புகாரில் தெரிவிக்கவில்லை என்றால் சரிதான். என்னை எங்கு வைத்து விசாரணை செய்தார்கள் என்றால் காவல் நிலையத்தில் வைத்து விசாரணை செய்தார்கள். போலீசார் சொன்னதின் பெயரில் தான் ஆஜர் எதிரியை நான் தெரியும் என்று முதல் விசாரணையில் சொன்னேன் என்றால் சரிதான். வழக்கிற்கும் எதிரிக்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

குற்றவியல் நீதித்துறை நடுவர்,

காரைக்குடி.

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2026.02.11 10:08:34 +0530

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, KARAIKUDI.
C.C. No.611/2022 P.W.2

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | கார்த்திக் | த-பெ | அழகப்பன் |
| ஊர்: | : | காரைக்குடி | | |
| வயது: | : | 36/2026 | வட்டம்: | |
| தொழில்: | : | நிதி நிறுவனம் | மாவட்டம் | சிவகங்கை |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 10.02.2026

**எதிரி ஆஜர்.**

-----------------------------------------------------------------------------------------------

குறுக்கு விசாரணை.

அ.சா.1 எனக்கு எப்படி உறவு என்றால் எனது உடன் பிறந்த சகோதரி. சம்பவம் பற்றி எனக்கு நேரடியாக எதுவும் தெரியது அ.சா.1 அலைபேசியில் அழைத்து சொன்னதின் பேரில் தான் எனக்கு தெரியும். வழக்கிற்கும் எதிரிக்கும் எந்தசம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2026.02.11 10:08:39 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காரைக்குடி.